# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN JUNE / JULY - 2010

## SOC 1.11 – BASIC CONCEPTS IN SOCIOLOGY

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. "நாளாந்த வாழ்வில் தோன்றும் சமூகப் பிரச்சினைகளும் (Social Problems), தேவைகளும் (needs) சமூகவியல் கற்கையின் தேவையை மென்மேலும் அதிகரிக்கச் செய்கின்றது." இக்கூற்றை உமது சமூகத்திலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

(20 புள்ளிகள்)

02. "சமூகமானது பல்வேறுபட்ட சமூக நிறுவனங்களின் சேர்க்கையினாலேயே இயங்குகின்றது." இக்கூற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

03. "நவீன சமூகத்தை (Modern Society) விட மரபு சமூகங்களினாலேயே (Traditional Societies) மதமானது ஒரு ஆதிக்க சக்தியாகவும் பலமான சமூக கட்டுப்பாட்டு முகவராகவும் தொழிற்படுகின்றது." இக்கூற்றை ஏற்கிறீரா? நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)

04. இலங்கை சமூகத்தில் அண்மைக்காலமாக அவதானிக்கக்கூடிய சமூக பொருளாதார மாற்றங்களை (Socio-economic Changes) தகுந்த உதாரணங்கள் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

05. சமூகக் குழு என்றால் என்னவென்று விளக்கி அதன் பிரதான பிரிவுகளையும் ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. (அ) சமூகமயமாக்கல் என்றால் என்ன?

(ஆ) சமூகமயமாக்கற் செயற்பாட்டில் (Socialization Process) பின்வரும் முகவர்கள் எத்தகைய பங்களிப்புகளைச் செய்கின்றன என விளக்குக.

(i) பாடசாலை (School)
(ii) ஊடகங்கள் (Media)

(20 புள்ளிகள்)

07. தற்கால சமூகத்தினைப் புரிந்துகொள்வதில் பெரிதும் முக்கியத்துவம் பெறுவது செயற்பாட்டு வாதமா? அல்லது முரண்பாட்டு வாதமா? உதாரணங்களுடன் விமர்சனரீரியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றுக்கு (03) சிறுகுறிப்பு வரைக.

(அ) சமூக இடைவினை (Social Interaction)

(ஆ) சமூகவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களும்

(இ) துணைக் கலாச்சாரம் (Sub Culture)

(ஈ) பயங்கரவாதத்திற்கெதிரான அமெரிக்காவின் செயற்பாடுகள்

(உ) முஸ்லிம்களும் தற்போதைய அரசியல் நிலைப்பாடுகளும்

(20 புள்ளிகள்)

***